அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 182

எனது இல. 2/9/156/6(37)எச்.
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7
1980, நவம்பர் மாதம் 26 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கத் தலைவர்கள் யாவர்க்கும்.

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க யாக்கங்கள் ஆகியவற்றில் தமிழ் மொழி உபயோகம்.

மேற்போந்த விடயம் தொடர்பாக அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட முடிவுகள் இச்சுற்றறிக்கையிற் றரப்பட்டுள்ளன. அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க யாக்கங்கள் யாவும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சுடன் ஒத்துழைக்குமாறும் அவை தமிழ் மொழியிற் பணியாற்ற அரசியலமைப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விடத்தெல்லாம் தமிழ் மொழியிற் கருமமாற்றுமாறும் வேண்டப்படுகின்றன. அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைவாக, தேவையான நெறிப்படுத்தும் கோட்பாடுகளை பிராந்திய அபிவிருத்தி அமைச்சு அளிக்கும்.

2. அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டுப் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் நிலை.

(அ) சிற்றூழியர்.

1975.10.29ஆந் தேதிய 59ஆம் இலக்கத் திருத்தத்தினால் திருத்தப்பட்டவாறான தாபனக் கோவையின் XIIஆம் அத்தியாயத்தின் 26(1) ஆம் பிரிவில் வரையறுக்கப்பட்டவாறான சிற்றூழியர்கள் யாவரும் அரச கரும மொழியிற் தேர்ச்சி பெறவேண்டுமென்னுந் தேவைப் பாட்டினின்றும் விலக்களிக்கப்படுவர். ஆயினும் வேலைக்கமர்த்தும் அதிகாரி எவரும் தமது திணைக்களத்தில் அல்லது வேலைத்தலத்திலுள்ள எவ் வகுதியையேனும் சேர்ந்த சிற்றூழியர்கட்கு அரசகரும மொழியில் மிகக்

குறைந்தளவு தகுதி தேவையெனக் கருதுமிடத்து, அப்பணிக்கமர்த்தும் அதிகாரி அவ்வாறான நிபந்தனையைவிதிக்க முன்னர் அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரது அனுமதியைப் பெறுதல் வேண்டும்; அவ்வித மாறுபாட்டுக்கு அனுமதி யளிக்கு முன் அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளர் இயைபுடைய அமைச்சுக்களை உசாவுதல் வேண்டும்.

(ஆ) தொழில் நுட்பத் தரங்கள்.

தொழில் நுட்பத் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் தமிழ் பேசப் படும் மாவட்டங்களில் கடமை புரிவதற்காக விசேடமாக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களும் அரசகரும மொழியில் 1 ஆம் தரத் தேர்ச்சியை மாத்திரம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) அரச சட்ட உத்தியோகத்தர்கள்.

அரச சட்ட உத்தியோகத்தர்கள் இப்போதுள்ள தேவைப்பாட்டைப் போன்று, அரசகரும மொழியில் 111 ஆந் தரம் உட்பட்டதாக, 111 ஆந் தரம் வரை தேர்ச்சியடையுமாறு கேட்டுக் கொள்ளப்படல் வேண்டும்.

3. உறுதிப்படுத்துதல்.

(அ) அரச கரும மொழியிற் தேர்ச்சி பெறுமாறு வேண்டப்படுபவர்களின் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் யாவருக்கும், நியமனம் அளிக்கப்பெற்றதும், அரச கரும மொழியிற் தேர்ச்சி பெறும் பொருட்டு முழு வேதனத்துடன் கூடியதாக ஆறு மாத காலத்திற்குவசதிகளளிக்கப்படல் வேண்டும்.

(ஆ) அதன் பின்னர் அவர்கள் இயைபுடைய தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுவர். அவர்கள் சித்தியடையாதவிடத்து, அவர்களுடைய வழமையான கடமையையும் ஆற்றிக் கொண்டு, முழு வேதனத்துடனை ஆறுமாத கால முடிவினை உடனடுத்து வரும் ஈராண்டுக் காலத்துட் குறித்த பரீட்சையில் சித்தியடைவதற்கு அவர்கட்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

(இ) விதிக்கப்பட்ட ஈராண்டுகள் ஆறு மாத காலத்திற்குள் அவர்கள் குறித்த பரீட்சை யிற் சித்தியெய்தத் தவறுமிடத்து அவர்களது சேவை முடிவுறுத்தப்படும்.

(ஈ) அரச கரும மொழியிற் தேர்ச்சியுடைய உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியில் விதிக்கப்பட்டவொரு பரீட்சைக்குத் தோற்றுவர். இதன் பொருட்டு ஏற்ற ஊக்கு விப்புகள் அவர்கட்கு வழங்கப்படல் வேண்டும்.

4. விளைவாந்தன்மையானநடவடிக்கைகள்.

(அ) விதிக்கப் பெற்ற அரசகரும மொழித் தேர்ச்சித் தேர்வுகளிற் சித்தியடையத் தவறியமை மட்டும் காரணமாக தமது பதவிகளில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அல்லது தமது வேதனவேற்றங்களையிழந்தவர்களான உத்தியோகத்தர்களை, ஓய்வூதியத்தை அல்லது பணிக்கொடையைப் பெறுவதற்கு தகவுடையவர்களாக்கும் பொருட்டு இந்நிபந்தனைகளை அவர்கள் பூர்த்தி செய்யாத போதிலும் அவர்தம்

சேவை இறுதியாக முடிவுறுத்தப்பட முன்னர் அவர்களின் பதவிகளில் உறுதிப் படுத்தப்படுதல் வேண்டும். அவர்கள் ஓய்வு பெறும் போதிருந்த தரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேதன வேற்றங்களைப் பெறமற்றெல்லா வழிகளிலும் அவர்கள் தகுதி பெற்றிருப்பின் அவ் வேதனவேற்றங்கள் மீட்டளிக்கப்படுதல் வேண்டும். (அவ் வேதன வேற்றங்கள் கொடுக்கப்பட்டிருப்பின் அவர்கள் எந்த வேதன நிலையை அடைந்திருப்பார்களோ அந்த வேதன நிலையில் அவர்கள் அமர்த்தப்படுவார்கள்; ஆனால் வேதனவேற்ற நிலுவைப் பணமேதவும் வழங்கப்படமாட்டாது என்பதே இதன் பொருளாகும்)

(ஆ) விதிக்கப்பட்ட காலத்திற்குள்ளெல்லாம் ஆனால் 1969, மார்ச்சு மாதம் 22ஆந் தேதியிட்ட இல. (ஐ) 214 ஐக் கொண்ட திறைச்சேரிச் சுற்று நிருபம், 1969, டிசெம்பர் மாதம் 15ஆந் தேதியிட்ட இல. (ஐ) 234ஐக் கொண்ட திறைச்சேரிச் சுற்று நிருபம் என்பனவற்றோடு சேர்த்து வாசிக்கப்படும், 1966, செத்தெம்பர் மாதம் 04ஆந் தேதியிட்ட 701 ஆம் இலக்கத் திறைச்சேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 1965ஆம் ஆண்டு தொடக்கம் 1968ஆம் ஆண்டு வரையான நீடிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் அரச கரும மொழியிற் தேர்ச்சி பெற்றவர்களும், 1969, செத்தெம்பர் மாதம் 06 ஆந் தேதியிட்ட 769 ஆம் இலக்கத் திறைச்சேரிச் சுற்றறிக்கையைப் பிரயோகித்ததனால் பதவியேற்ற வாய்ப்புக்கள் பாரதூரமான முறையிற் பாதிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்கட்குப் பதவியுயர்வுகள் வழங்கப்படுதல் வேண்டும்; ஆனால், விதிக்கப்பட்ட கால எல்லைக்குட் தேர்ச்சி பெற்றமையினால் பதவியுயர்த்தப்பட்டவர்கட்குப் பின்னரே [illegible] அவர்கள் அமர்த்தப்படுதல் வேண்டும்.

(இ) இலங்கை நிருவாகச் சேவையைச் சார்ந்த முன்னர்ச் சேர்ந்த சிங்கள உத்தியோகத்தர்கள் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்திற்குச் சமமான சிங்களப் பரீட்சையொன்றிற் சித்தியடைந்திருப்பின் இரண்டாவது மொழிப் பரீட்சையிற் சித்தியடைவதினின்றும் தற்போது விலக்களிக்கப்படுவதால், அதே சிறப்புரிமை முன்னர்ச் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்கட்கும் வழங்கப்படுதல் வேண்டும். அதாவது முன்னர்ச் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்திற்கவசியமான தரத்தினைக் கொண்ட தமிழ்ப் பரீட்சையொன்றில் ஏலவே சித்தியடைந்திருந்தால் அவர்கள் இரண்டாம் மொழிப் பரீட்சையிற் சித்தியடைவதினின்றும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) முன்னர் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தரெவராவது இரண்டாவது மொழித் தேவைப்பாடு செயற்படுத்தப்பட்டமை காரணமாக வேதனவேற்ற நலன்களை இழந்திருப்பின் அவ்வாறிழந்த நலன்கள் யாவும் அவருக்கு மீட்டளிக்கப்படுதல் வேண்டும்; ஆனால் நிலுவைப் பணமெதுவும் வழங்கப்படுதலாகாது.

5. இம் முடிவுகள் 1970, யூலை மாதம் 9 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

ஒப்பமிட்டவர்: டீ. பி. ஜே. பி; எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.